அல்ல. அண்ணா தி.மு.க. ஆட்சி வந்தவுடன் ஏற்பட்டது அல்ல. நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றதற்கு பின்னாலே தான் 8 கோடி ரூபாயை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒதுக்கி நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் புதிய துணை மின் நிலையம் டிரான்ஸ் பார்மர்கள் எல்லாம் அமைக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து இதற்கான பல்வேறு பணிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நம்முடைய சட்டமன்ற உறுப்பினருடைய பகுதியிலேயும் எந்தெந்தப் பகுதி களிலே வோ-வோல்டேஜ் பிராப்ளம் இருக்கிறது என்று தெரிவிப்பார்களேயானால் குறிப்பாக அந்தப் பகுதிகளிலே புதிய டிரான்ஸ் பார்மர்கள் நிறுவி அந்தக் குறைகள் நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 11 திரு. ஆர். முருகையா பாண்டியன் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

11—

விக்கிரமசிங்கபுரத்தில் அடுக்குமாடி வீடுகள் கட்டுதல்.

*20457—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் அம்பாசமுத்திரம் விக்கிரமசிங்கபுரத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் நகரம் தான் மிகவும் வளர்ச்சி அடைந்த ஒரு நகரம்.

இந்த நகரத்திலே அரசு துறையைச் சேர்ந்த அனைத்து அலுவலகங்களும் இருக்கின்றன. மேலும் விக்கிரமசிங்கபுரத்திலே மதுரா கோட்ஸ் நிறுவனமும் நல்ல முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கேயும் கிட்டத்தட்ட 10 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேலாக வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கே வீட்டு வசதி இல்லாமல் பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. மேலும் அதை விட சின்ன தாலுக்காவிலே கூட வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது ஒரு பெரிய நகரம். இந்த நகரத்திலே வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்த வீடுகள் இல்லாதது பெருங்குறையாக இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர், அவர்கள், இந்த நிதி ஆண்டிலே அம்பாசமுத்திரம் பகுதியிலே அடுக்கு மாடி வீடுகள் கட்டிக் கொடுத்து, அம்பாசமுத்திரம் நகரினுடைய வீட்டுப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் அம்பாசமுத்திரம் விக்கிரசிங்கபுரத்தில் அடுக்குமாடி வீடுகள் கட்டுகின்ற திட்டம் எதுவும் தற்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் கிடையாது. இருப்பினும் இங்கு சிறிய மற்றும் நடுத்தர நகர வீட்டு வசதி திட்டம் முதல் கட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு தேவை நிர்ணயம் செய்யப்பட்டது. இதற்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் நிலத்தைப் பெறுவதற்கு உரிய வகையிலே ஒத்துழைப்பு தந்து நிலத்தைப் பெற்றுத் தருவார்களேயானால் தேவையான நிலம் கிடைக்கப் பெற்றவுடன் இங்கு சிறிய மற்றும் நடுத்தர நகர வீட்டு வசதி திட்டத்தின் கீழ் வீட்டு வசதித் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 12, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

12—

தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்தல்.

*9522—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—